## தேசிய லொத்தர் சபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய லொத்தர் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் 4.1.1 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சபையின் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 91 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயப் பெறுமதிக்கு அளவிடுதல் தொடர்பில் சபையின்கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின்போது வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |
| (இ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் 110 ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் சபையினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான இணங்காமைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **நியம இலக்கம் 01** | | |
| (i) | சபையினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்துள்ளதாக நிதிக்கூற்றுக்களுடனான குறிப்பு இலக்கம் 1.4 மற்றும் 2.1.2 பந்தியின்மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், பதிவு இலக்கம் 2.7 மூலம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 மற்றும் 15 பின்பற்றப்படவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சரியான கொள்கைகளை குறிப்பிடுவதாக குறித்து வைத்துக் கொள்கின்றேன். | நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மக்கள் அழைப்பு கட்டளையொன்றினை உரிய திகதியில் நிறுவனத்திற்கு வழங்காமையின் அடிப்படையில் அறிவிடப்பட்டிருந்த ரூபா 488,000 தொகையான பணம் ஏனைய வருமானமாக கருத்தில் கொள்ளாது மேற்படி நியமத்தின் 32 ஆம் பந்திக்கு முரணாக மக்கள் அழைப்பு கட்டமைப்பின் கிரயத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சீராக்கத்தின் பின்னர் அறவிடப்பட்ட தண்டப்பணம், வருமானத்திற்கீடான தண்டப்பணத்திற்கு கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் செலவினங்களை ஈடுசெய்து கணக்கு வைத்தல் இடம்பெறாது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நியமத்தின் 69 ஆம் பந்திக்கு முரணாக முன்னைய வருடங்களில் நடைமுறை பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 9,063,436 தொகையானது மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறை சபையினால் முன்னைய வருடங்களிலிருந்து தொடர்ச்சியாக பின்பற்றப்படுகின்றது அவதானிக்கப்பட்டது. | இவ்வாறான சீராக்கங்களை குறைக்குமாறு குறைத்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |
| (iv) | நியமத்தின் 69 ஆம் பிரிவுக்கு முரணாக முன்னைய வருடங்களின் போது நடைமுறைப் பொறுப்பாக மதிப்பிடப்பட்ட ரூபா 16,141,331 தொகையானது மீளாய்வாண்டின் செலவினங்களில் கழிக்கப்பட்டமையால் நடப்பாண்டின் உள்ளபடியான செலவினங்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | ரூபா 286,551,044 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலவினம் நியமத்தின் 103 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் விற்பனைகள் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2018 திருத்தப்பட்ட இறுதி கணக்குகளில் விற்பனை செய்யும் விற்பனை மற்றும் விநியோக செலவினங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**(ஆ) நியம இலக்கம் 07**

| | | | |
|---|---|---|---|
| (i) | நடப்பாண்டில் ஏற்படாத அதேபோல் வருமான கூற்று உள்ளடக்கப்படாத ரூபா 82,494 தொகையான சொத்துக்கள் அகற்றல் நட்டமானது நியமத்தின் 18(ஆ) பந்திக்கு முரணாக வரிக்கு முன்னதான இலாபத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. | (I),(II), (III), (IV), (V), (VI) எதிர்காலத்தில் காசாக செலுத்தப்படும் மற்றும் காசாக கிடைத்த பெறுமதிகள் கருத்தில் கொள்ளப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி அறிக்கையிடல் நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ii) | நடப்பாண்டில் காசாக செலுத்தப்பட்ட வருமான வரி பெறுமதியானது ரூபா 483,706,173 ஆன போதிலும், நியமத்தின் 35 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 498,030,403 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. சபையின் வட்டி வருமானத்தின் அடிப்படையிலான நிறுத்தி | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தல் வரி பெறுமதி வருமானவரி பெறுமதிக்கு சேர்க்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று காண்பிக்கப்பட்டிருந்தமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டினுள் துறைமுகங்கள் அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,371,712 தொகையான நீண்டகால பொறுப்புக்கள், நியமத்தின் 17 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இந்த பொறுப்புக்கு உரிய வருடத்தில் ஆரம்ப மீதி மற்றும் வருடத்தின் இறுதி மீதிகள் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடான ரூபா 4,115,137 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | மீளாய்வாண்டினுள் நிலையான சொத்துக்களினை கைப்பற்றும் போது காசாக செலுத்தியுள்ள கொடுப்பனவுகள் ரூபா 62,697,098 ஆன போதிலும், நியமத்தின் 16(அ) பந்தியின் அறிவுரைகளை கருத்திற் கொள்ளாது காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 74,300,042 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | மீளாய்வாண்டிகுள் காசாக பெறப்பட்ட சுற்றுலா விடுதி வாடகை வருமானம் மற்றும் வாகன வாடகை வருமானம் ரூபா 1,768,785 ஆன போதிலும், நியமத்தின் 16 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களை கருத்திற் கொள்ளாது காசுப் பாய்ச்சல் கூற்று ரூபா 1,728,365 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்திற்கு உரிய மீளாய்வாண்டில் காசாக பெறப்பட்ட ரூபா 40,420 தொகையான வருமானத்தினை கருத்திற் கொள்ளாமை இந்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டின் உள்ளபடியான ஒதுக்கத்தின் வேறுபாடான ரூபா 430,370,642 பெறுமதியானது நியமத்தின் 35 ஆம் பந்திக்கு முரணாக நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | வெளிநாட்டு பிரயோக பணத்தில் பேணிச் செல்லப்படும் கடன்பட்டோரின் உருவான வெளிநாட்டு அந்நிய செலாவணி இலாபமான ரூபா 940,502 பெறுமதி அந்த கடன்பட்டோரின் ஆரம்ப மீதிக்கு சீராக்கம் செய்யப்படாது காசுப் புத்தகத்தில் ஆரம்ப மீதிக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் வியாபார கடன்பட்டோரின் விலகல் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது கடன்பட்டோரின் ஆரம்ப மீதியை சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (viii) | மேற்குறிப்பிடப்பட்டவாறு இந்த நியமத்தின் அறிவுரைகளை கருத்திற் கொள்ளாது காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டமையின் காரணத்தினால் செயற்படு மூலதனத்துள் காண்பிக்கப்படும் இருப்பிலான குறைவு ரூபா 8,500,000 இனால் கூடுதலாகவும் ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பானது ரூபா 14,371,650 இனால் குறைவாகவும் மற்றும் வியாபார மற்றும் ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பானது ரூபா 8,507,299 இனால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசாக செலுத்தப்பட்ட மற்றும் காசாக கிடைத்த பெறுமதிகளை கருத்திற் கொண்டு காசுப்பாய்ச்ச் கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | **நியம இலக்கம் 12**<br>சபையின் வருமான வரி கொள்கை நிதிக்கூற்றுக்களுடனான குறிப்பு இலக்கம் 2.3.4 இன் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் 61(உ) பந்திக்கு இணங்க வருமான வரி தொடர்பில் சபையின் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகளில் 2.3.4 இன் கீழ் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | **நியம இலக்கம் 16**<br>சபைக்கு சொந்தமான விளைவற்ற சொத்துக்கள் மற்றும் பெறுமதி முழுமையாக பதிவழிக்கப்பட்டுள்ள தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதி 79 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது சரியாக கொள்கைகளை வெளிப்படுத்துவதாக குறித்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (உ) **நியம இலக்கம் 19** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான சபையினால் ஊழிய பணிக்கொடைகளாக ரூபா 52,031,249 தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு பொருத்தமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நியமத்தின் 135 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நட்டத்தினை இனங்காணுதல் தொடர்பில் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது முதலீட்டுத் திட்டம் மற்றும் முதலீடு செய்த விதம் ஆகியவற்றினை வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (ஊ) **நியம இலக்கம் 20** | | |
| நிதி அமைச்சினால் சபைக்கு வெகுமதியளிக்கப்பட்ட ரூபா 5,795,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பெறுமதி நியமத்தின் 25 ஆம் பந்திக்கு முரணாக முழுமையாக ஏனைய வருமானமாக முன்னைய ஆண்டின் வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. நடப்பாண்டிலும் அந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதற்கமைய தொடர்ந்தும் ரூபா 2,776,770 தேறிய பெறுமதியுடைய இந்த மோட்டார் வெகுமதியின் வடிவில் அல்லாது நிதி நிலமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்குகளில் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | -மேற்படி- |
| (உ) **நியம இலக்கம் 24** | | |
| (i) நியமத்தின் 17 ஆம் பந்தியில் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் முகாமைத்துவ மற்றும் ஊழிய நலன் பிரிவுகளில் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>• குறுங்கால ஊழியர் நலன்கள்<br>• வழங்களின் பின்னரான சேவை நலன்கள்<br>• ஏனைய நீண்டகால நலன்கள்<br>• சமூக நலன்கள் | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் (I), (II) பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (ii) நியமத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையின் தற்போதைய பணிப்பாளர் பதவியினை வகிக்கும் அங்கத்தவரொருவர் அந்த பதவியினை வகிப்பதற்கு முன்னர் சபையின் மாவட்ட சந்தைப்படுத்தல் முகவராக செயற்பட்ட காலத்தினுள் அவருக்கு செலுத்த வேண்டிய | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ரூபா 102,018 தொகையானது கடன்பட்டோர் மீதிகளினுள் காணப்பட்டது. எனினும் அந்த பெறுமதிக்கு உரிய முறையில் வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

(எ) **நியம இலக்கம் 40**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகளில் பெறுமதியானது முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் புலப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அநுராதபுர சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா 1,086,820 தொகையான ஏனைய அலுவலக கட்டிடத்தின் கிரயமும் முதலீட்டு சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான கணக்குகளில் இதுதொடர்பில் வெளிப்படுத்துவது தொடர்பில் பதிவு செய்து கொள்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (ஆ) சபை அட்டுறு செலவினத்திற்கான நடைமுறை சாத்தியமான அடிப்படையில் நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்காக பாதிடப்பட்ட தரவுகளை கருத்திற் கொண்டு அட்டுறு செலவினத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டினுள் அட்டுறு செலவினம் மிகை ஒதுக்கீடு ரூபா 8,732,081 ஆக இருந்தது. | சபையின் பாதிடப்பட்ட தரவுகள் அடிப்படையில் அட்டுறு செலவினத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் பெற்றுக்கொள்ளக் கூடிய உச்ச நடைமுறை சாத்தியமான தரவுகளை பயன்படுத்தி அட்டுறு செலவினங்களுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உள்ளபடியாக செலுத்த வேண்டிய பெறுமதி அட்டுறு செலவினமாக கணக்கு வைத்தல். |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான எஞ்சியதாக காணப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் கழிவுப் பெறுமதி ரூபா 809,062 ஆன தொகைக்கான கணக்குகளின் உரிய சீராக்கங்கள் | 2019 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களின் கழிவுப் பெறுமதி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படாது அவற்றின் அச்சிட்டு கிரயமான ரூபா 40,352,380 தொகையான முழுத் தொகையும் விற்பனை கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கையை விட பரிசுகளுக்காக ஒதுக்கீட்டுக்களின் சேமிப்புக்களாகக் காணப்பட்ட ரூபா 430,370,642 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டிற்கான இலாபம் அந்த பெறுமதியினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எஞ்சியுள்ள பரிசுகளுக்காக ஒதுக்கீடுகள் 06 மாதங்களை கடந்த பின்னர் திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றமையால் அந்த அளவினை நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்கம் செய்ய அவசியமற்றதாகும். | பரிசுகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொண்டதன் பின்னர் பரிசுகளிலிருந்து உருவாகாத பரிசு பெறுநர்களுக்கான நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்குவதன் மூலம் பரிசு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும் என்பது. |
| (இ) | சபையினால் மீளாய்வாண்டின் வருமான வரி கணிப்பிடும் போது மிகை அறவீடு அதன் அடிப்படையிலான ஏனைய செலவினங்களாக துறைமுகங்கள் அதிகாரசபைக்கு ரூபா 10,973,697 தொகையானது சபையின் செலவினமாக கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. இந்த செலவினம் கடந்த வருடங்களுக்கு உரியதாக சபையினால் தீர்க்கப்பட வேண்டிய செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டதுடன் புதிய வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 10(ஆ)(iii) மற்றும் 11(i) பந்திகளின் பிரகாரம் இந்த செலவினங்கள் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்க முடியாத செலவினங்களாக அவதானிக்கப்பட்டது. அதன் காரணத்தினால் மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 3,070,635 இனால் குறைத்துக் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2018 இன் இறுதிக் கணக்குகளில் திருத்தப்பட்டுள்ளது. | நிலவும் வருமான வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தேசிய லொத்தர் சபைக்குரிய வருமான வரி விகிதமானது 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 40 சதவீதமான போதிலும் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரகாரம் அது 28 சதவீதமாகும். அதன் பிரகாரம் சபையின் கணக்கீட்டு காலப்பகுதி சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான போதிலும் அந்த காலப்பகுதிக்கு உரியதான வருடாந்த வருமான வரி செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது மேற்குறிப்பிடப்பட்ட பழைய மற்றும் புதிய வரி வீதங்கள் இரண்டும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2018 சனவரி 01 முதல் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை முதல் காலாண்டிற்கு புதிய வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 203(1) பந்தியின் பிரகாரம் பழைய வரி வீதங்களும் ஏனைய 3 காலாண்டுகளுக்காகவும் புதிய வீதங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், சபையினால் முழு வருடத்திற்குமான வரி வீதம் 28 சதவீதமாக கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதல் காலாண்டிற்கான வருமான வரி செலவினம் 12 சதவீதத்தினால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கடந்த வருடத்தின் வருமான வரி கணிப்பீட்டினை மேற்கொள்ளும் போது கருத்தில் கொள்ளப்பட்ட ரூபா 17,681,257 கூட்டுத்தொகையான இடமளிக்க முடியாத செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது ஒரே சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் | ஆண்டின் வருமான வரி கணிப்பீட்டின் போது கழிப்பனவுகளின்கீழ் எடுக்கப்படாத காலக்கழிவு நட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் சபையினால் சபையின் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய வரித் தொகை | நிலவும் வருமான வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையிலான வருமான வரித் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்தமையின் பின்னர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கின்றேன். | |
| (ஊ) | சபையினால் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,336,575 தொகையானது 2008 ஏப்ரல் 23 ஆந் திகதிய 1546/18 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாது அந்த தொகை முதலீடுகளின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச முயற்சிகள் திணைக்களத்திற்கு உரிய அறிவுரைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. எனினும் இதுவரையிலும் அது தொடர்பில் பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (எ) | சபையினால் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள டொலர் போர்ச்சூன் சீட்டின் விற்கப்படாத எஞ்சிய ரூபா 142,636 பெறுமதியான 3317 லொத்தர் சீட்டுக்கள் விற்பனையாக கருதி இறுதிஇருப்பில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | டொலர் போர்ச்சூன் லொத்தர் சீட்டுக்கள் தற்போதும் விற்பனை செய்யப்பட்டவாறு காணப்படும் லொத்தர் சீட்டு என்பதுடன் சந்தைப்படுத்தல் பிரிவு மற்றும் நிதி பிரிவு ஒன்றிணைந்ததாக இது தொடர்பில தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பொருள் மெய்மையாய்வினை சரியாக மேற்கொள்ளல். |
| (ஏ) | பதவியணிக்காக கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சிய ரூபா 730,625 பெறுமதியான 1169 டீசேர்ட்கள் மற்றும் முகவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாத ரூபா 329,800 பெறுமதியான பரிசு கூப்பன்கள் 34 இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய லொத்தர் சபையின் கொள்ளுப்பிட்டியில் முதலீயே மாவத்தை எனும் இடத்திற்கு மாற்றும் போது ஏற்பட்ட கலவர நிலைமையின் அடிப்படையில் கொள்வனவு லெஜர் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு முடியாமை அடிப்படையில் இந்த தவறு இடம்பெற்றுள்ளது. தற்போது அந்த தவறு திருத்தப்பட்டுள்ளது. | பொருள் மெய்மையாய்வின் போது இருப்பு பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்படுதல் மற்றும் அதற்கமைய செயற்படல். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்குரியதான சட்டங்கள் சட்டச் செலவினம் ரூபா 610,155 மற்றும் முகவர்கள் மற்றும் மேலதிக விற்பனை மேம்படுத்தல் செலவினமான | 2019 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 145,000 ஆன தொகை அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | மீளாய்வாண்டினுள் விளம்பர செலவினங்களில் உள்ளடக்கப்பட்டு உரித்து கோரப்படாத ரூபா 865,000 பெறுமதியான அனுசரணைகள் அட்டுறு செலவின கணக்கில் இரண்டு தடவைகள் பதிவுசெய்யப்பட்டிருந்த காரணத்தினால் அட்டுறு செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - | |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| விடயம் | தொகை | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அனுசரணை செலவினம் | ரூபா 2,047,500 | அனுசரணை பணிகளின் கீழான அனுசரணை செலவினமாக அட்டுறு செலவினங்களின் கீழ் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் ரூபா 10,072,500 தொகையானது அட்டுறு செலவினங்களில் இருந்து 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2,047,500 தொகையான செலவினங்களை சான்றுபடுத்துவதற்கான உரிய அனுசரணை கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் பெயர்ப்பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான செலவினங்களுக்கான சான்றுகள் விளம்பர பிரிவிடம் காணப்படுகின்றது. | உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய செலவினங்களை இனங்கண்டு கணக்கு வைத்தல். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் கடன் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த லொத்தர் விற்பனை கூடாரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,083,363 தொகையில் விற்பனை பிரதிநிதிகள் 45 பேரிடமிருந்து கிடைத்திருந்த காலுறைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 362,638 தொகையுமாக ரூபா 6,446,001 தொகையான தவணைப்பணம் அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விற்பனை பிரதிநிதிகளின் ஊக்குவிப்புப் படிகள் மற்றும் விசேட மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 30 இலட்சம் தொகையும் இந்த வருடத்தினுள் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தவணைப் பணத்தினை அறவிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தினை முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் சீராக்கம் செய்யவும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் பதிவு செய்துள்ள 91 விற்பனை முகவர்களிடமிருந்து 31 விற்பனை முகவர்கள் மாத்திரம் பிணை வைத்திருந்தனர். உரிய பிணை எல்லையினை மிகைத்து ரூபா 19,819,533 தொகையும் பிணை முறிகள் நீங்கலான விற்பனை முகவர்கள் 89 பேருக்கு ரூபா 139,282,243 தொகையுமாக உடனடி லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.<br>கடனினை அறவிடுதல் நலிவாக காணப்பட்டதன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது விற்பனை முகவர்கள் 29 பேருக்கு கடனுக்கு விற்பனை செய்த ரூபா 23,365,438 தொகையான உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக அறவிட வேண்டிய பணம் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி பிணை வைக்க கூடிய நிதி பலமுள்ள மாவட்ட விற்பனை முகவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட போதிலும், உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனைக்கு முகவர்கள் வழங்கும் முன்னுரிமை குறைவாக இருப்பதால் அதிக நிதிக் கட்டுப்பாட்டினை பேணுவதற்கு சிரமமாகியுள்ளது. இந்த நிலைமையினுள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் கொள்கையினை பின்பற்றி தீர்மானிக்கப்பட்ட கடன் எல்லையின் கீழ் உடனடி லொத்தர் சீட்டுக்கள் இடம்பெற்றிருந்தது.<br>அறவிடப்பட வேண்டிய தேறிய தொகை ரூபா 13.9 மில்லியன் ஆகும். | பிணை முறிகளை பெற்றுக்கொள்ளவும் மற்றும் சரியான நிதிக் கட்டுப்பாட்டிற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2007 ஆம் ஆண்டின் போது சபையின் ஊழியர்கள் இருவருக்கு ரூபா 1,003,038 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் கடனுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவர்களிடமிருந்து அந்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. தற்போது ஒரு உத்தியோகத்தர் சுழற்சி சேவையில் இல்லாதிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | ஒருவர் தொடர்பில் வழக்கொன்றினை விசாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன் அந்த தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் ஏனைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கைகளின் பிரகாரம் செயற்பட்டு கடன் தொகைகளினை அறவிடுதல். |
| (ஈ) | சபையினால் 2013 ஆம் ஆண்டு முதல் உரிய பொறுப்புக்களை திட்டவட்டமான இனங்காணாது அட்டுறு செலவினங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 9,085,823 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக செலுத்த வேண்டிய பணம் இந்த அட்டுறு மீதியில் காண்பிக்கப்படுகின்றது. இதன் Gaminy Arts Advertising Services நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் சிக்கலானது என்பதனால் இது தற்போது செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சேவைகள் நிறைவு செய்து நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 212,276,805 கூட்டுத்தொகையான வியாபார கடன்பட்டோர் மீதியினுள் கொழும்பு எயார்போட், சுக்கிரி லொத்தர் சீட்டுக்காக ரூபா 4,728,146 தொகையும் விற்பனை முகவர்களிடமிருந்து 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 30,983,156 தொகையும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் விற்பனை முகவர் மீதிகளினுள் காலமடைந்த விற்பனை முகர்வகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 559,300 தொகை ஆகும். இந்த பெறுமதி தொடர்பில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை அறவிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்படுவதுடன் மரணமடைந்த இருவரிடமிருந்து ரூபா 559,300.00 தொகையான கடன் பணத்தை பதிவழிப்பதற்கு நிதி அமைச்சு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முறையான நடவடிக்கைகளின் பிரகாரம் செயற்பட்டு கடனை அறவிடுதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2016 ஆம் ஆண்டின் போது சபையின் நலன்புரி சங்கத்திற்கு விற்பனை செய்யப்பட்ட ரூபா 1,567,992 பெறுமதியான லொத்தர் சீட்டுக்களுக்கு பதிலாக சபையின் நலன்புரி சங்கத்தின் தலையீட்டுடன் நிறுவனத்தின் வலய முகாமையாளர்கள் 04 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,011,363 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்களுக்கும் மீதிகள் தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் லொத்தர் சீட்டுக்களுக்கான செஸ் வரியொன்றை விதிப்பதன் மூலம் சபையில் காணப்பட்ட உடனடி லொத்தர் சீட்டுக்கள் இருப்பு தொடர்பில் ஏற்படும் பாதகமான நிலைமையினை கருத்திற் கொண்டு சபை கள உத்தியோகத்தர்களுக்கு லொத்தர் இருப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக பொலிஸ் முறையீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள ஒரு உத்தியோகத்தருக்கும் மற்றும் இரு உத்தியோகத்தர்களின் ஊக்குவிப்பு படிகளை செலுத்துதலும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவர்களின் நிலுவைப் பணத்தில் ஒரு பகுதியினை அறவிட்டு எஞ்சிய பணத்தினை அறவிடுதல் தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவிக்கின்றேன். | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ஏனைய கடன் மீதிகளினுள் எட்டு வருடங்கள் பழமையான ரூபா 1,317,614 தொகையான கடன்மீதியொன்று காணப்பட்டதுடன் அதனுள் செயலற்ற விற்பனை முகவர்கள் 71 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,637,199 மற்றும் பெறவேண்டிய ரூபா 566,146 தொகையாக இருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக காணப்படும் மீதிகளை அமைச்சின் அங்கீகாரத்தின் பின்னர் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான நடவடிக்கைகளின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஏ) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரிருந்து முன்கொண்டுவரப்படும் இனங்காணப்படாத ரூபா 3,585,823 தொகையான செலவு மீதியொன்று 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 4 | தீர்க்கப்படாத மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முறையான நடவடிக்கைகளை எடுத்து குறித்த மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 15,543,973 தொகையும் பதவியணியின் 14 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 213,112 தொகையுமாக நிலவிய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | 2003 ஆம் ஆண்டின் போது மரணமடைந்த மற்றும் பணி நீக்கத்திற்கு உட்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 240,983 தொகையான ஊக்குவிப்பு கொடுப்பனவு, எட்டு வருடங்களுக்கு முன்னர் மாவட்ட சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளின் கணனி தவணைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 256,952 தொகையான பணமும் கூடுதாக கிடைத்த கணனி தவணைகளை தீர்க்காமல் காணப்பட்டது. | ஒரு நபர் தொடர்பில் வழக்கொன்று விசாரணை செய்தவாறு காணப்பட்டதுடன் மற்றைய உத்தியோகத்தருக்கு உரித்துள்ள கோரிக்கையாளர்கள் காணப்படவில்லை. செலுத்த வேண்டிய மீதிகளை இரண்டை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய முறையில் தேடிப்பார்த்து மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |
| (ஒ) | மீளசெலுத்தும் வைப்புகளாக சபையினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 7,611,611 தொகையானது 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்கு உரியதாக கிடைத்திருந்தது. உரிய சேவைகளை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்திற்கு அவற்றை அனுப்பி தீர்க்கப்பட்டிருக்காததுடன் முகவர்களால் வைப்புக்களாக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 107,953 ஆன தொகையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த செலுத்த வேண்டிய வைப்புக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| **(அ)** | **1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம்.** | | | |
| (i) | 14(2) மற்றும் 16(1) மற்றும் 16(4) பிரிவுகள் | சபையினால் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகாரசபைகளுக்காக லொத்தர் நடாத்தும் போது உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும் கொவிசெத, சுப்பிரிவாசன, ஜாதிக சம்பத, நீரோக மற்றும் செவன லொத்தர் சீட்டுக்களுக்காக குறித்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடாது மீளாய்வாண்டின் போது ரூபா 5,204,004,004 தொகை வெகுமதிகளாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கை கைச்சாத்திடாது லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்துதல் காரணத்தினால் வெற்றியாளர்களால் உரித்து கோரப்படாத பரிசுகள் தொடர்பில் சபையின் விருப்பத்தின் பெயரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு. | 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபையினை தாபிக்கும் போது அடிப்படை நோக்காக அமைந்தது லொத்தர்களை நடாத்துதல் ஆகும். அதன் பிரகாரம் லொத்தர்களை நடாத்தும் போது ஏனைய எந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் தேவைப்பாடு இல்லை. 1998 இன் (22) ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் (7.2.1A) பரிசில்களை வழங்குவதற்காக பயன்படுத்துவதற்கு பரிசு ஒதுக்க நிதியமொன்று உருவாக்கப்பட்டது. மேலும் விசேட சீட்டுழுப்புக்களின் போது மேலதிக வெகுமதிகளுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படும் அவ்வாறான நிலைமைகளினுள் அதிகாரச்சட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ள பெறுகைகளினுள் இதற்காக அமைச்சின் அங்கீகாரத்தினை | அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள படி நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு ஏற்படுவதில்லையென்பதனை சுட்டிக் காண்பிக்கின்றேன். | |
| • 6 வெற்றியாளர் களினால் உரித்து கோரப்படாத விமான டிக்கட்டுக்களின் பெறுமதியான ரூபா 2,306,400 ஆன தொகை பரிசு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைத்தல். | வெளிநாட்டு சுற்றுலா வெற்றியாளர்களினால் பணம் கோரப்பட்டிருந்தமை, அந்த பரிசுகளை வழங்கும் போது ஏற்பட்ட பெறுகை சிக்கல்களின் காரணமாக பணிப்பாளர் சபைக்கு அங்கீகாரமொன்று அந்த வெகுமதிகளுக்காக நிதி வெகுமதிகள் வழங்கப்பட்டது. பரிசுகளை பெற்றுக்கொள்வதற்கு முன்வராத வெற்றியாளர்களின்பரிசுத் தொகைகளை மீள வெகுமதி ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | - மேற்படி – |
| • 6 மாதங்களை கடந்த ரூபா 12,762,192 தொகையான உரித்துக் கோரப்படாத பணமல்லாத பொருள் வெகுமதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்காமை. | வெற்றியாளர்கள் முன்வராத வெகுமதிப் பொருட்கள் பணப்பரிசுகளாக கருதி திறைசேரிக்கு அனுப்புவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுவதுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த வெகுமதியின் கிரயமானது பெற்றுக்கொள்ளப்படும் மூலங்களிலிருந்து வெகுமதி ஒதுக்க நிதியத்திற்கு கொண்டுசெல்லப்படும். | - மேற்படி - |
| • ரூபா 10,850,000 கூட்டுத்தொகையான உரித்து கோரப்படாத இரு வாகனங்கள் சபையின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை. | 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஜீப் வண்டி தொடர்ச்சியாக கண்காட்சிக்காக பயன்படுத்தப்பட்டமை காரணமாக வெளிவாரி தோற்றம் பரிசாக வழங்குவதற்கு பொருத்தமற்றதாக காணப்பட்டமை, 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வான் வண்டி வெற்றியாளரொருவர் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உருவாக்கி உரிய வெகுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு முன்வராமை மற்றும் அதற்கடுத்த சீட்டிழுப்பின் போது வெற்றியாளரொருவர் உருவாகாமை போன்ற விடயங்கள் காரணமாக மீண்டும் ஒரு தடவை வெகுமதியாக பயன்படுத் துவதற்கு நுகர்வோரிடையே எதிர்மறையான எண்ணங்களை உருவாக்கக்கூடும். நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வாகன குழாமுக்கு உள்ளடக்கப்பட்டது. | |
| (ii) | 17(2) பிரிவு | லொத்தர் வருமானத்தில் உரிய செலவினங்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த வருடங்களுக்கு உரியதாக அவ்வாறு செலவு வைக்கப்படாத ரூபா 523,075,433 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இலாபம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுமாயின் நிறுவனத்தின் நிலவும் நெருக்கடியான நிறுவனத்தில் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு நேர்கின்றமையால் நிறுவனத்தினை நடாத்திச் செல்ல முடியாது. திரண்ட இலாபத்தில் காண்பிக்கப்படுவது நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பதனால் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் இயலுமை காணப்படாமை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 20(1)(2) பிரிவு | சபையினால் லொத்தர்களை நடாத்துதல் தொடர்பில் விதிகள் உருவாக்கப்பட்டு விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட மெகாபவர், நீரோக, சுப்பிரி திலக்சபதி, தன நிதானய மற்றும் செவன ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்காக | தேசிய லொத்தர் சபையினால் லொத்தர்களுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டிருந்த விதிகள் மற்றும் அனைத்து லொத்தர்களிலும் வேறுபாடு சட்ட உருவாக்கம் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. லொத்தர் வெகுமதி சுழற்சி, சீட்டிழுப்புக்கள் மற்றும் சீட்டிழுப்பு நடாத்துதல் போன்ற திகதிகள் | லொத்தர்களை நடாத்துவதற்கு உரிய விதிகள் லொத்தர்களை கொள்வனவு செய்யும் தரப்பினருக்கு உரிய முறையில் வர்த்தமானி மூலம் அறிவித்தல் தாமதமின்றி மேற்கொள்ளல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றத்திற்கு உள்ளாகும் அனைத்து சந்தர்ப்பத்திலும் வர்த்தமானியில் பிரசுரித்தல் நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பது நிதி அமைச்சினால் அவதானிக்கப்பட்டுள்ளது. ‘‘தேசிய லொத்தர் சபை அதிகாரச்சட்டம்’’ பெயரில் புதிய அதிகாரச்சட்டமொன்று நிதி அசைச்சிலிருந்து வேறாக தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அதிகாரச்சட்டத்தினை உருவாக்கும் போது சட்ட வரைபு திணைக்களத்திற்கு லொத்தர் சீட்டிழுப்பு சுழற்சிகள் மாற்றமடைதல் வர்த்தமானியில் அறிவிப்பது நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பது கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 2(அ)(1)(ஏ) பிரிவு | சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 20,750,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட சிங்கள் கெப் வண்டிகள் 6 இணைக்கப்பட்ட டபள் கப் வண்டியொன்றாக வெளியில் தெரியும்படி புதுப்பிக்கப்பட்டு ரூபா 1,625,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரிய முறையில் மோட்டார் வாகன ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கெப் வண்டிகளில் கொள்ளப்பட்டுள்ளது ஒரு பகுதியை அகற்றுதல் அல்ல பின்புறத்திற்காக புதிதாக திட்டமிடப்பட்டுள்ள Fiber Canopy என்பன பொருத்துதல் மாத்திரமாகும். இதன் விசேடத்துவமானது அதன் முற்புறம் மற்றும் பிற்புறம் ஒன்றுக்கொன்று இணைந்திருத்தல் மாத்திரம் ஆகும்.<br><br>மேலும் இதில் இருக்கைகளின் எண்ணிக்கை அல்லது மற்றுமொரு பகுதியின் பிரதானமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு உருவாகவில்லை. எவ்வாறாயினும் தேவையேற்படின் | புதுப்பித்தல்களுக்காக உரிய முறையில் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு காண்பித்து அந்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதாக அறிவிக்கின்றேன். | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) | viii ஆம் அத்தியாயத்தின் 10.1 பந்தி மற்றும் 10.2 பந்தி | வார இறுதியில் மற்றும் அரச விடுமுறை தினங்களில் கடமைகளில் ஈடுபடுவதற்காக எட்டு மணித்தியாலங்களுக்கு குறையாத நாளொன்றுக்காக சம்பளத்தில் 1/20 ஆன படியொன்றினை வழங்க முடியுமாயினும் அந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்களை கடமை நிறைவேற்றும் ஒவ்வொரு நாளுக்கும் இரு தினங்களுக்கு கடமை மேற்கொண்டதாக கருதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் அவ்வாறு இரு தினங்களாக கருதிய 60 சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 184,000 ஆகும். மேலும் வாரத்தில் வேலை நாட்களுக்கும் அரச விடுமுறை நாட்களாக கருதி விடுமுறை படிகள் செலுத்தப்பட்டிருந்த 40 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 68,706 ஆகும். | புதிய லொத்தர் சீட்டுக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துதல், நாளொன்றுக்கு 4 லொத்தர் சீட்டிழுப்பு சந்தர்ப்பங்களை மேற்கொள்ளுதல், வாரத்தில் 7 நாட்களும் லொத்தர் சீட்டிழுத்தல் மற்றும் வருடத்தின் 360 நாட்களுக்கு அலுவலனத்தினை திறந்து வைத்திருத்தல் போன்ற விடயங்களினால் பதவியணியின் பெரும்பாலானோருக்கு வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் கடமைகளை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் கருத்தில் கொண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையில் காணப்படும் சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல். |
| (ii) | xxiv அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு 2018 சனவரி 23/PE/LO/NLV/C | 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் ஆதன கடன்களை வழங்குதல் வங்கிகளின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பில் அரச முயற்சிகள் | 1995 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஊழியர் நலன்புரியினை ஏற்படுத்தும் நோக்கில் 4 சதவீதமான வட்டியின் அடிப்படையில் | திறைசேரியின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | OPE/2018 ஆம் இலக்க அரச முயற்சிகள் திணைக்களத்தின் கடிதம் | திணைக்களத்தின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டின் போது 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 18,183,883 ஆன தொகை ஆதன கடன்களாக சபையின் பணத்தினை உபயோகித்து செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஆதன கடன்களுக்காக ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய வட்டியினை கருத்திற் கொள்ளாது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் 4 சதவீதமான ஆகக்குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்தது. | வீட்டுக்கடன் வழங்குதல் இடம்பெறுகின்றது. ஏதேனும் விடயத்தின் அடிப்படையில் கடன் தொகையினை ஒரே திகதிக்கு முன்னர் தீர்ப்பதற்கு முன்னர் நேருமாயின் அதற்காக 18 சதவீதமான வட்டியொன்றினை செலுத்தி கடன் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | xxiv அத்தியாயம் | முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது சபையின் பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் / மேம்படுத்தல் பதவிக்காக நபரொருவர் இணைக்கப்பட்டு 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் இதுவரையிலும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டவாறு உள்ளது. | அறிவுறுத்தல் கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்பட்டு உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103(1), 104(3), 104(4) மற்றும் 1462 | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளினுள் சபைக்கு சொந்தமான வாகனங்களுக்காக ஏற்பட்டிருந்த 16 விபத்துக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டியவர்களை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே விபத்து தொடர்பில் பொலிசுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல், விளம்பரம் பொருட்கள் சேவைகளை விநியோகித்தல் தொடர்பான உடன்படிக்கைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | நிதிப்பிரமாணம் 754, 756, 757, 758 மற்றும் 770 | ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது இந்த விடயங்கள் கருத்திற் கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் 01 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | (i) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான உரித்துடைய 04 உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் வழங்ககூடிய எரிபொருள் படிகளின் எல்லையினை விஞ்சி ரூபா 1,402,219 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | 2008 மே 29 ஆந் திகதி நிதி மற்றும் கொள்கை திணைக்களத்தின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் 2008 யூன் 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட விசேட பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் அங்கீகாரம் எழுத்துமூலம் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | உத்தியோகபூர்வ வாகன உத்தில்லாத வலயத்தின் 24 முகாமையாளர்கள் மற்றும் 17 சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படியொன்று மற்றும் தமுது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவாராயின் மேலதிகமான மாதாந்த படியொன்றுமான உத்தியோகத்தரின் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 5,237,409 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரங்கள் வலய முகாமையாளருக்கு மாதாந்தம் ரூபா 25,000 ஆன மேலதிக உச்சத்திற்கும் மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தியோகத்தருக்கு மாதாந்தம் 25 லீற்றர் எரிபொருள் ஆகக்கூடிய அளவிற்கு உள்ளடங்களால கடமைகளின் தேவைப்பாட்டிற்கு மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கிலோமீற்றர் பிரமாணத்தின் அளவுக்குகணிப்பிடப்பட்டு எரிபொருள் படிகள் வழங்கப்படுகின்றது. | - மேற்படி - |
| **(ஊ) அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | | | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| • 8.9.3 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சு அல்லது மற்றுமொரு அரச நிறுவனத்திற்காக வழங்கப்பட கூடாத போதிலும், அதற்கு முரணாக சபையின் ஐந்து உத்தியோகத்தர்கள் மற்றும் ரூபா 11,276,786 பெறுமதியான | நிதி அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்கள் நிதி | செலுத்தப்படும் சம்பளம் மற்றும் படிகள் நிதி மீளளிப்பு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | 3 மோட்டார் வாகனங்கள் நிதி அமைச்சிற்காக மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது சபையில் செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடைகள் ஊக்குவிப்பு படித்தொகையான ரூபா 1,800,323 தொகை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அசைச்சிற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் கடமைகளுக்காக சம்பளம் மற்றும் படிகளை வழங்குதல் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களுக்கு செலுத்தும் சம்பளம் மற்றும் படிகளை மீளளிப்பு செய்வதற்கு முடியாதுள்ளது. | |
| • 9.12 ஆம் பந்தி | (i) திறைசேரியின் அங்கீகாரமின்றி 2016 ஆம் ஆண்டின் போது சபையினால் அரசரன சரண நிதியம் எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற்காக லொத்தர் பரிசு பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட பரிசுகள் ‘‘நீரோகா’’ லொத்தர் சீட்டுக்கள் விற்பனை வருமானத்தில் 0.5 சதவீதம் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் ரூபா 14,016,057 ஆன மீதியொன்று நிலவியது. | அரசரன சரண நிதியத்திற்கு பரிசு பெறுநர்களினால் தமது விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட வெகுமதிகள் என்பதுடன் அவற்றில் ஏழ்மையானவர்களுக்கு நன்கொடைகள் வழங்கப்படுகின்றன. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல். |
| | (ii) சபையின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினருக்காக ரூபா 19,129,643 தொகையான நலன்புரி கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. இந்த கொடுப்பனவினை எதிர்வரும் காலங்களில் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவினை ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் சிங்கள புதுவருடம் மற்றும் நத்தார் வழா ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு செலுத்தப்படும் கொடுப்பனவாகும். | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(ii)** | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது பதவியணியினருக்கான ஊக்குவிப்பு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்பாக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 97,228,123 ஆகும். | 2004 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | - மேற்படி - |
| | | (ii) | அரசின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த படிகளுக்காக நாளொன்றிற்கு ஆகக்கூடியது ரூபா 3,000 வரையான விசேட மேம்படுத்தல் கொடுப்பனவொன்றினை பதவியணிக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திட்டவட்டமான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 4,910,750 ஆகும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் விசேட மேம்படுத்தல் விசேட கடமைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| **(iii)** | 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடி/03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோருக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 343,486 ஆன ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. | அரச வருமானத்தினை அதிகரிப்பதற்கு அமைச்சிற்கு வழங்கப்படும் ஆக உச்ச வருமான இலக்குகளை பெற்றுக்கொள்வதற்காக சந்தையின்போட்டித்தன்மைக்கு முகங்கொடுக்கும் போது துரித தீர்மானங்களை எடுத்தல் பல்வேறு பணிகளை திட்டமிடல், பல்வேறு கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அவற்றிற்கு பங்களித்தல் போன்ற லொத்தர்சீட்டிழுப்பின் போது ஒட்டுமொத்த நடைமுறையின் மேற்பார்வை பொறுப்பு | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போன்ற அனைத்து பணிகளும் மேற்கொள்ளும் போது தலைவரினதும் செயற்பாட்டு பணிப்பாளரினதும் அறிவுரைகள், வழிகாட்டல்கள் மற்றும் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும்.<br><br>அவ்வாறே நாளாந்தம் நிறுவனத்தின் பணிகளுக்கு உதவி செய்தல், அனைத்து ஆவணங்களுக்கும் கையொப்பமிடல், கூட்டங்களுக்கு பங்குபற்றல் ஆகிய கையளிக்கப்பட்ட பெரும்பாலான பணிகள் நிறைவேற்றப்படுகின்றமையால் அவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளினை செலுத்துவதினை நியாயப்படுத்த முடியும் என்பதுடன் அந்த நிறுவனத்திற்கு மிகவும் விலையுள்ள நடவடிக்கை என்பதினை சுட்டிக்காண்பிக்கின்றேன். | |
| (iv) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | சபையினால் வருடாந்த விளம்பர திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அரச முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது விளம்பர செலவினமாக ரூபா 1,023,507,765 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த வருடங்களிலும் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 940,272,567 ஆகும். | சந்தைப்படுத்தல் பிரிவின் சந்தைப்படுத்தல் பாதீடு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர் அரச முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய அனுமதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (v) | 1993 சனவரி 21 ஆந் திகதிய PE1/70/7/Vo11 ஆம் இலக்க பிரதி திறைசேரி செயலாளரின் | அரசிற்காக நடாத்தப்படும் அனைத்து லொத்தர்களிடமிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் 16.5 சதவீதமானது திரண்ட நிதியத்திற்கு | ஆரம்பம் முதல் மகாஜன சம்பத மற்றும் வாசனா சம்பத ஆகிய லொத்தர்களில் மாத்திரம் 16.5 சதவீதமானது திரண்ட நிதியத்திற்கு | திறைசேரியின் அறிவுரையின் பிரகாரம் உரிய அனுப்பி வைத்தல் இடம்பெறுதல். |

| | | | |
|---|---|---|---|
| கடிதம் | அனுப்பப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிகுள் நடாத்தப்பட்டிருந்த மெகா பவர் மற்றும் தனநிதானய எனும் 02 வகையான லொத்தர்களின் வருமானத்தில் 10 சதவீதமான பெறுமதியானது மாத்திரம் அனுப்பியமையினால் தொடர்ந்தும் திறைசேரிக்கு அனுப்பப்படாத பெறுமதி ரூபா 200,901,108 ஆகும். | அனுப்பப்படுவதுடன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய லொத்தர்களில் 10 சதவீதமானது திரண்ட நிதியத்திற்கு அனுப்புவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் சேமிப்பு கணக்கிற்கு சந்தைப்படுத்தல் முகர்களினால் பணம் வைப்பு செய்யும் பொது வங்கியினால் 0.50 சதவீதமான சேவைக் கட்டணமொன்று அறவிடப்படும். அந்தக் கட்டணத்தை கணிப்பிடுதல் தொடர்பிலான தகவல்கள் சபையிடம் காணப்படாததுடன் அதற்கான எழுத்து மூலமான உடன்படிக்கையொன்று போன்றே பணிப்பாளர் சபையின்அங்கீகாரமும் முன்வைக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டிற்காக வங்கியில் அறவிடப்பட்ட கட்டணம் ரூபா 41,591,442 ஆக இருந்ததுடன் கடந்த 05 வருடங்களினுள் அவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 171,443,337 ஆகும். இந்தக் கட்டணத்தினை குறைத்துக் கொள்ளல் தொடர்பில் எந்த நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வினால் அவதானிக்கப்படவில்லை. | சபையின் சேமிப்பு கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் வைப்புக்களுக்காக தற்போது வங்கியில் கட்டணம் பின் சதவீதம் 0.05 இல் இருந்து 0.45 சதவீதம் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் வைப்புக்கள் தொடர்பிலான பணிகள் வங்கியிலிருந்து அகற்றப்பட்டு சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. | வங்கிக் கட்டணத்தை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை ஈடுபடுத்தல். |

## 1.9 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் அதன் கணக்குகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மத்தியப்படுத்தப்பட்ட கணனி மென்பொருள் 2016 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அந்த மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தது. முன்னர் நிலவிய மத்தியப்படுத்தப்பட்ட முறையின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நிலவிய நம்பகத்தன்மை இந்த பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் கேள்விக்குரியதாகவிருந்தது. அத்துடன் உரிய வேறுபடுத்தல்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்களின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் இந்த மென்பொருளினை அறிமுகப்படுத்திய கம்பனி நிராகரித்திருந்தது. | மத்தியப்படுத்தப்பட்ட Sage Accpac கணனி மென்பொருளினை பயன்படுத்தும் போது ஏற்படும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியொன்று இன்றளவிலும் பிரதான பேரேட்டில் எஞ்சியுள்ளது. இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் இடமபெறுவதினை எதிர்காலத்தில் தடுப்பதற்காக Accpac கட்டமைப்பிற்கு புதிதாக இணைக்கப்பட்ட கணனி மென்பொருளொன்றின் பிரதான பேரேடு அகற்றப்பட்டு தனித்தினயான மென்பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட கணனி கட்டமைப்பின் காரணமாக மிகவும் துல்லியமான மற்றும் செயற்திறனாக பேணிச் செல்ல முடியுமாகவிருந்தது. | மென்பொருளுக்கு சொந்தமான தரப்பினை பாதுகாக்கும் முறையில் கணனி கட்டமைப்பினை பாதுகாத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறானது ரூபா 136,267,795 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகையானது 139,805,208 ஆனமையால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 276,073,003 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களினுள் நிதிப்பெறுபேறினை பகுப்பாய்வு செய்யும் போது அவதானிக்கப்பட்டது மீளாய்வாண்டின் போது அதற்கு முன்னைய வருடங்களுக்கு ஒப்பாக 197 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தமை ஆகும். எவ்வாறெனினும் இந்த நிதி ரீதியான பெறுபேறுக்கு ஊழியர் ஊதியம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரி ஆகியவற்றினை மீள சீராக்கும் போது 2014 ஆம் ஆண்டின் மற்றும் 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பிலான குறைவொன்று 2015, 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| | -------- | -------- | -------- | ------- | ------- |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரிக்கு பின்னரான இலாபம் (இலாபப் பங்கு செலுத்துவதற்கு முன்னர்) | (136,267,795) | 139,805,208 | 414,761,431 | 241,016,039 | (8,663,584 ) |
| ஊழியர் பணிக்கொடை | 420,862,040 | 375,410,032 | 380,279,707 | 320,462,652 | 267,215,394 |
| <u>அரசிற்கு செலுத்திய வரி</u> | | | | | |
| வருமான வரி | 1,174,402,368 | 484,610,312 | 482,128,237 | 669,785,229 | 117,853,496 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 286,551,044 | 235,767,246 | 285,776,997 | 253,267,754 | 211,761,787 |
| பெறுமதி சேர் வரி | 890,352,095 | 742,298,500 | 706,868,280 | 573,252,862 | 540,502,194 |
| திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு | 2,426,947,888 | 2,016,986,336 | 2,445,594,544 | 2,130,953,970 | 1,888,455,133 |
| <u>பெறுமானத் தேய்வு</u> | | | | | |
| மோட்டார் வாகனங்களின் பெறுமானத் தேய்வு | 19,290,936 | 55,627,510 | 54,979,532 | 48,727,716 | 33,000,569 |
| ஏனைய பெறுமானத் தேய்வு | 60,229,778 | 70,474,209 | 68,497,174 | 60,061,990 | 26,090,623 |
| | ------------------ | ----------------- | ----------------- | ---------------- | ----------------- |
| | 5,142,368,354 | 4,120,979,353 | 4,838,885,902 | 4,297,528,212 | 3,076,215,612 |
| | ========== | ========= | ========= | ========= | ========= |

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வாசனா சம்பத லொத்தர் சீட்டின் வருமானம் 48 சதவீதத்தினால் குறைவடையும் போது விளம்பர செலவினம் 30 சதவீதத்தினால் மாத்திரம் குறைவடைந்திருந்தது. சுக்கிரி வாசனா லொத்தர் சீட்டின் வருமானம் 6 சதவீதத்தினால் குறைவடையும் போது அதன் விளம்பர செலவினம் 9 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. | போட்டி அடிப்படையிலான சந்தையினுள் வியாபார நாமத்தினை காத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மூலோபாங்கள் ஆகும். சந்தையில் நடத்தையின் பிரகாரம் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். | லொத்தர் விற்பகைக்கு புதிய மூலோபாயங்களை பயன்படுத்துதல். |
| (ii) | ரூபா 4,885 மில்லியன் உயரிய வருமானத்தினை ஈட்டியுள்ள மகாஜன சம்பத லொத்தர் சீட்டின் விளம்பர கிரயம் விற்பனை வருமானத்தில் 2.9 சதவீதமான பெறுமதியினை கொண்டிருந்த போதிலும், ரூபா 1,162 மில்லியன் வருமானத்தை | சம்பத் ரேகா வாரத்திற்கு ஒரு தடவை மாத்திரம் விற்பனை செய்யும் லொத்தர் சீட்டாவதுடன் சந்தையினை பாதுகாத்துக் கொள்வதற்காக விளம்பர செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. | லொத்தரினை நடாத்துவதற்கான அடிப்படையினை கருத்திற் கொண்டு விளம்பர செலவினங்களை திட்டமிடல் |

| | | | |
|---|---|---|---|
| | ஈட்டியுள்ள சம்பத் ரேகா லொத்தர் சீட்டின் விளம்பர கிரயம் விற்பனை வருமானத்தில் 8 சதவீதமான உயர்வான பெறுமதியினைக் கொண்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட சுக்கிரி பரிசுகள் மற்றும் ஏனைய பணப் பரிசுகள் ஆகியவற்றினை கட்டமைப்பினை கருத்திற்கொள்ளும் போது ரூபா 2,000 தொகையை விட குறைவான பரிசு பெறுநர்களின் சதவீதம் 99 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியினை கொண்டிருந்தது. | சுப்பிரி பரிசுகளின் முதலாவது பரிசு நீங்கலாக ஏனைய பரிசுகளின் உருளைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறு அளவிலான வெற்றியாளர்கள் உயர் பெறுமதியினை எடுக்கும் விதத்தில் ஆகும். வெற்றியாளர்களினை அதிகரிப்பதன் மூலம் அவர்களினை தொடர்ந்தும் அதன்மூலம் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு ஊக்குவிப்பதற்கு ஏதேனும் முறையில் வெற்றியாளர்களினை ஊக்குவிப்பதன் மூலம் லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தை குறைத்தல். | அதிகளவான வெற்றியாளர்களுக்கு உச்ச பரிசுத் தொகையினை தீர்மானித்தல். |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய வருடங்களின் சபையின் இலாபத்தன்மை மற்றும் செயற்படு மூலதன விகதம் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | விகிதம் | ஆண்டு 2018 | 2017 |
|---|---|---|---|
| (i) | மொத்த இலாப (விகிதம்) | 13.04 | 12.36 |
| (ii) | தேறிய இலாபம் / (நட்டம்)(சதவீதம்) | 0.67 | (0.83) |
| (iii) | நடைமுறைச் சொத்து விகிதம் | 1.75:1 | 1.65:1 |
| (iv) | விரைவுச் சொத்து விகிதம் | 1.73:1 | 1.61:1 |

சபையின் நடைமுறை விரைவு விகிதம் உயர்வான மட்டத்தில் பேணுவதற்கு தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் விரைவு விகிதம் 1.73:1 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வெகுமதி ஒதுக்க நிதியம் ஊழியர் பணிக்கொடை நிதியம் நடைமுறைச் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையின் அடிப்படையில் அந்த விகிதம் உருவாகியுள்ளமைஅவதானிக்கப்பட்டமை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் நாளாந்த சேவைகளுக்காக பதவியணியொன்றினை ஏற்படுத்தி அதற்காக சட்ட உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும், சபையின் சட்ட சேவைகள் பெறுகையொன்றின் மூலம் அல்லாது வெளிவாரி சட்டவல்லுனர் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், உரிய சட்ட சேவைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பில் தேடிப்பார்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு பெற்றுக்கொண்ட சட்டசேவைகளுக்காக ரூபா 2,189,109 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு வாணிப உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டவாறு உள்ள வழக்கொன்றில் ஒவ்வொரு வழக்குத் தடவைகளுக்காகவும் சட்டத்தரணிகள் மூவருக்கு 5 வழக்குகளுக்காக செலுத்தியுள்ள சட்ட கட்டணம் 471,750 ஆகும். | தேசிய லொத்தர் சபையின் பிரதி பொது முகாமையாளர் (சட்டம்) இனால் உடன்படிக்கைகளை தயாரித்தல், சபையின் தரப்பினராக வழக்கு நடவடிக்கைகளுக்காக ஆதாரமான விடயங்களினை கோவைப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அவதானிப்புக்கள் (Observation) உள்ளடங்கலாக அடிப்படை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தேசிய லொத்தர் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சட்ட சபையின் (Panel of Lawyers) சட்டத்தரணிகளுடன் தொடர்புகொள்ளல், பணிப்பாளர் சபையின் செயலாளர் மற்றும் கணக்காய்வு குழுவின் செயலாளராகவும் செயற்படுதல் ஆகியவற்றுக்கு ஆகும். பல்வேறுபட்ட சேவைகளை பெற்றுக்கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மற்றும் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகள் சபையில் (Panel of Lawyers) சட்டத்தரணிகளிடம் இருந்து மாத்திரம் ஆகும்.<br><br>மேலும், வழக்கு இலக்கம் HC/CIVIL/262/MR உடைய கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டவாறுள்ள வழக்கிற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியொருவர் மற்றும் சனாதிபதி சட்டத்தரணியொருவர் ஆஜராகவேண்டியதுடன் சனாதிபதி சட்டத்தரணியொருவர் | சட்டமா அதிபரிடம் வினவி தனிப்பட்ட சட்டத்தரணியின் உதவியினை பெற்றுக்கொள்வது பொருத்தமானது ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| | | நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் போது கனிஷ்ட சட்டத்தரணியொருவருடன் ஆஜராக வேண்டும் என்பது கட்டாயமாகும். | |
| (ஆ) | ஆக்கபூர்வமான விளம்பர பிரதி முகவர் நிறுவனத்தினால் உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்பு நிறைவு செய்யப்பட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்குரிய அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த விளம்பரங்கள் உரிய ஊடக நிறுவனங்களில் ஒளிபரப்பப்படுவதுடன் ஒவ்வொரு தடவைக்கும் அந்த விளம்பர நிறுவனத்திற்கு மொத்த சேவைக் கட்டணத்தில் 11.5 சதவீதமானது செலுத்துதல் சிக்கனமற்றதாக காணப்பட்டது. மீளாய்வாண்டினுள் ரூபா 36,724,054 தொகை அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறுகை நடைமுறையினூடாக இணைத்துக் கொள்ளல் இடம்பெறுவதுடன் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படுதல் சந்தைப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படாததுடன் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் அந்த நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுதல் இடம்பெறுகின்றது. | சபையினால் தொடர்பாடல் காலத்திற்காக ஒதுக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | தேசிய லொத்தர் சபையின் நாளாந்த சீட்டிழுப்புக்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக நடுவர் நிறுவனமொன்றாக விளம்பர நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டதாக அறிக்கை சமர்ப்பித்து அதற்காக 15 சதவீத சேவைக்கட்டமொன்றினை விளம்பர நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறானதொரு தற்போது நடாத்தப்படும் செவன லொத்தர் சீட்டிழுப்பிற்காக நிறுவனத்தின் பதவியணியை ஏற்படுத்தி அதன்மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 5,738,357 ஆன தொகை முடியுமானதாக இருந்தது. எனினும், ஏனைய 10 லொத்தர்களுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காது அந்த பணிகள் விளம்பர முகவர் | அனைத்து லொத்தர்களுக்கும் உரிய பெறுகை நடைமுறையை பின்பற்றி தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் முகவர் நிறுவனங்களுக்காக தேசிய ரூபவாஹினி மூலம் அந்த நிறுவனங்களுக்காக 15 சதவீதமான சேவைக் கட்டணமொன்று செலுத்தப்படுகின்றது. இந்த கொடுப்பனவுகளுக்காக சபையின் தலையீடொன்று இடம்பெறாததுடன் செவன லொத்தர்களுக்காக மாத்திரம் முகவர் நிறுவனமொன்று அந்த சேவைக் கட்டணம் கழிக்கப்பட்டு ரூபவாஹினி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொண்டமை அறிக்கையிடப்பட்டு ரூபா 65,256,074 ஆன சிக்கனமற்ற ரீதியில் செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | எளிமையான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதன் மூலம் சபையினால் நடாத்தப்படும் லொத்தர்களுக்காக தேசிய புலமைச் சொத்து ஆதன அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வியாபார குறியீட்டினை பதிவு செய்தல் நேரடியாக மேற்கொள்ளும் இயலுமை உள்ள போது அதற்காக வெளிவாரி சட்டத்தரணி கம்பனியொன்றினை பயன்படுத்தி மீளாய்வாண்டினுள் அந்த கம்பனிக்காக ரூபா 296,305 ஆன தொகை சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. | சந்தைக் குறியீட்டின் பதிவு தொடர்பில் லொத்தர் பெயர்பதிவின் போது தொகுதியின் பிரகாரம் மேற்கொள்ளுதல் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதன் போது சட்டத்தரணியின் சேவை அவசியமானது. | விண்ணப்பங்களினை கையளிக்கும் போது அதற்காக எதிர்ப்புக்கள் காணப்படுமாயின் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தல் போதுமானதாகும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 32 ஆவது கொழும்பு எயார்போர்ட் சுப்பர் றோ லொத்தர் சீட்டிழுப்பின் போது இரத்துச் செய்யப்பட்ட ரூபா 627,750 பெறுமதியான காணாமல் போன 135 லொத்தர் சீட்டுக்கள் காணப்பட்டதுடன் அதனுள் தனியார் விளம்பர நிறுவனத்தினால் காணாமல் செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் 66 உம் சபையின் விளம்பர பிரிவின்பதவியணியின் மூலம்காணாமல் ஆக்கப்பட்ட 69 லொத்தர் சீட்டுக்களும் உள்ளடங்கியுள்ளன. அது தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு அந்தப் பணத்தினை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 135 லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களாக கருதி சீட்டுழுப்பினை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன் நியாயமான காலப்பகுதியினுள் அந்த டிக்கட்டுக்களுக்கு உரித்தாளர்கள் காணப்படுவர் எனின் சபைக்கு அறிவிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் விதத்தில் பிரதான பத்திரிகை 3 இல் மும்மொழிகளிலும் அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | லொத்தர் சீட்டுக்கள் காணாமல் போனமை தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு அதன்பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டினுள் சபைக்குச் சொந்தமான இலக்கம் 227-0217 இலக்கம் கொண்ட லொறி ரூபா 451,605 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வியாபார | விபத்து நிகழும் சந்தர்ப்பத்தில் இது உருவாக்கப்பட்டு சுமார் 02 வருடங்கள் கடந்திருந்ததுடன் மீள உருவாக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருந்தது. | சேதத்திற்கு உள்ளான ஆதனங்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு உரிய தீர்ப்பனவுகளை |

| | | | |
|---|---|---|---|
| | விளம்பர மாதிரியில் மற்றுமொரு டிரக்டர் வண்டியில் மோதி அந்த மாதிரிக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்காக பாரிய செலவினங்களை மேற்கொள்ள நேர்கின்றமையால் மற்றும் விளம்பர நடவடிக்கைகளின் போது மிகவும் சிரமமாக காணப்படுகின்றமையால் அதன் மாதிரிகளை அகற்றி அதற்குப் பதிலாக புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட கெப் வண்டியொன்றில் சிறு வீட்டு மாதிரியொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. | மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 825,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த PS-2354 இலக்கமுடைய வாகனம் 2018 யூன் 12 ஆந் திகதி அவசர விபத்திற்கு உள்ளான காரணத்தினால் அந்த நிறுவனம் கைதவிர்க்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக காப்புறுதி சபைக்கு அறிவிக்கப்பட்டு அதற்கு உரிய காப்பீட்டு தொகை ரூபா 600,000 ஆகும். | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 825,000 ஆன தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட இலக்கம் PS-2354 இலக்கமுடைய வாகனம் யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் அந்த பழுதுபார்த்தலுக்கு மொத்த மதிப்பீட்டு செவினமான ரூபா 402,610 தொகை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும்காப்புறுதி நிறுவனம் அதனை பழுதுபார்ப்பதற்காக ரூபா 600,000 ஆன தொகைக்கு வாகனத்தினை கைதவிர்ப்பதற்கு இணங்கியிருந்தது. அதற்கமைய இது தொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையிலும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான பரிந்துரைகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தல். |
| (ஈ) | தேசிய லொத்தர் சபையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ள இணைப்பு உத்தியோகத்தரொருவருக்கு கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்த KV-0392 இலக்கமுடைய வாகனம் சபைக்கு அறிவிக்காது 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட பணயத்திற்காக பயன்படுத்தும் போது விபத்திற்கு உள்ளாகியிருந்தது. அந்த வாகனத்தினை பழுதுபார்ப்பதற்காக ரூபா 538,650 ஆன கிரயமொன்றினை | காப்புறுதியில் முழுமையான தொகையை அதாவது ரூபா 538,650 தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் விபத்து காரணமாக சபைக்கு எவ்வித நட்டமும் ஏற்பட்டிருக்கவில்லை. சம்பவம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(3) இன் கீழ் ஆரம்ப அறிக்கை அனுப்பப்பட்டள்ளது. மேலும் சம்பவம்தொடர்பில் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் கிடைத்துள்ள சான்றுகளின் பிரகாரம் இது வாகனத்தின் சாரதியின் தவறினால் ஏற்பட்டது | தனிப்பட்ட பயணங்களுக்காக கடமைவாகனங்களை ஈடுபடுத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ள நேர்ந்திருந்த போதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அல்ல என்பது சுட்டிக்காட்டுகின்றேன். | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கடந்த வருடங்களின் போது கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடை தொகையினை மீள சபைக்கு அறவிடுமாறு பொது முயற்சிகள் தொடர்பான குழு 2013 மார்ச் 21 ஆந் திகதிகட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அந்த தொகையினை அறவிடுவதற்கு பெறவேண்டிய தொகையான நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கூடுதலாக செலுத்தியுள்ள பணிக்கொடை தொகையை சபைக்கு மீளளிப்பு செய்யுமாறு உரிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை 02 வருட காலப்பகுதியினுள் முன்னால் பணிப்பாளர்சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒருமாத அடிப்படை சம்பளம் பணிக்கொடை பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் அறிவுரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த தொகையினை அறவிடுதல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதனால் தேசிய லொத்தர் சபையின் கட்டுப்பாட்டு பிரிவினால் 2018 யூன் 29 ஆந் திகதிய 3810(19) ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் செயற்படல். |
| (ஆ) 2014 நவம்பர் 04 ஆந் திகதிஇடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் போது வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான பொன்சோல் வீதியின் அமைந்துள்ள 112 பேர்ச் அளவான காணியின்புதிய கட்டிடமொன்றினை நிர்மாணிக்க வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டிடத்தினை திட்டமிடல் பணிகளுக்காக வீடமைப்பு நிர்மாண கலைஞர் ஒருவர் தெரிவு செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இந்த நிர்மாணங்கள் 2019 மே 31 ஆந் | மதியுரை சேவைகள் நிறுவனத்தினால் இணங்கியதன் பிரகாரம் விலைக்கேள்வி ஆவணங்களை தயாரிக்கும் பணி வரையிலுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட நிர்மாண மதிப்பீட்டினை விஞ்சியமையின் அடிப்படையில் புதிய மதிப்பீடுகளுக்காக மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடு அதிகரித்தமை காரணமாக குறிப்பிட்டு அறிக்கையொன்றினை வழங்குமாறு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவினால் மதியுரை | அரசின் கொள்கைகளுக்கு இணங்க திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் நிர்மாணங்களுக்கு தேவையான அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது சபையின் அலுலவலகம் மற்றும்களஞ்சிய பணிகள் நடாத்திச் செல்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்திற்காக மாதாந்தம் ரூபா 9,936,994 தொகை வற் வரியுடன் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய மதிப்பீட்டிற்கான அமைச்சரவைப் பத்திரம் 2018 மார்ச் 21 ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தற்போது அரசில் நிலவும் கொள்கையின் பிரகாரம் புதிய கட்டிடத்தினை நிர்மாணித்தல் தொடர்பில் அனுமதி வழங்கமுடியாது என எமக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | |

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தேசிய லொத்தர் சபையினால் மீளாய்வாண்டின் போது நடமாடும் விளம்பர வண்டிகள் 21 இற்காக சாரதிகள் மற்றும் விளம்பர உத்தியோகத்தரொருவர் படி ஈடுபடுத்தி ரூபா 158,125,880 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த விற்பனையின் அடிப்படையில் 17.5 சதவீதமான விற்பனை தரகு ரூபா 27,672,029 ஆன தொகை எவ்வித ஆவண சான்றுதல்களும் இல்லாது அந்த பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த பிரிவில் பணிப்பொறுப்பு, பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் விளம்பர பிரிவு மற்றும் விசேட சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தொடர்புபடும் பதவியணியினால் விற்பனையில் பெற்றுக்கொள்ளப்படும் லொத்தர் சீட்டுக்களுக்காக 16.50 படி செலுத்தி எஞ்சும் தரகுப் பணத்தை அவர்களுக்கு பதிவு செய்து வழங்குதல் இடம்பெறுவதில்லை. அதன் பணிப்பொறுப்பு தொடர்பில் விசேடமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிராததுடன் அவ்வாறு பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இல்லாதிருந்தமை எமது எண்ணமாகும். | சபையினால் பெற்றுக்கொண்ட தரகுப் பணத்தினை கையளித்தல் மற்றும் பொறுப்பேற்றல் தொடர்பில் ஆவணமொன்றினை பெறுதல். |
| (ஆ) பதவியணிக்காக பேணிச் செல்லப்படும் பல்வேறு 04 நிதியங்கள் கணக்காய்விற்கு உட்படுத்தும்போது தனிப்பட்ட கணக்காய்வாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 119,000 ஆன தொகை மற்றும் கடந்த வருடத்தில் ரூபா 235,000 | ஆரம்பம் முதல் இதுவரையிலும் கணக்காய்வு கட்டணம் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை | திறைசேரியின் அங்கீகாரத்தின்பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையுமாக ரூபா 354,000 கூட்டுத்தொகை சபையின் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கணக்காய்வு கட்டணங்கள் உரிய நிதியங்களினால் செலுத்தப்படாது சபையின் நிதியத்திலிருந்து செலுத்துவதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டவாறுள்ளது. | |
| (இ) | சபையில் பதிவு செய்துள்ள விற்பனை முகவர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு பணிப்பாளர் சபையினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக செயற்படாது 2016 யூலை முதல் 2017 யூலை வரையான காலத்திற்கு ரூபா 8,290,055 தொகையான மேலதிக கிரயமொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டு நாணய கடிதங்கள் காப்புறுதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2016, 2017 ஆண்டுகளுக்காக செலுத்தப்படாதுள்ள ரூபா 23,365,438 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கடன் மீதிகளை அறவிடவதற்கு தொலைபேசி மூலம் நினைவுறுத்தல் மேற்கொள்ளுதல், பழைய மீதிகளுடனான விற்பனை முகவர்களுக்கு வழங்கப்படும் விசேட சீட்டிழுப்பு லொத்தர் கடன்களை அடிப்படையில் வழங்காதிருத்தல், சேவைக்கட்டணங்களை விடுவிக்காது நிறுத்தி வைத்தல் மற்றும் அதன் மூலம் பகுதியாக கடனை அறவிடுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் சிறந்த பதிலொன்றினை தெரிவிக்காத முகவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | காப்புறுதி உரித்துறுதியின் செயற்பாட்டு காலப்பகுதிக்கு உரிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு ரூபா 6,110,000 பெறுமதியான மக்கள் அழைப்புகள் 650 இல் மக்கள் அழைப்புக்கள் 180 எண்ணிக்கையானது 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பண்டங்களின் தரம், நிலைத்திரு தன்மை மற்றும் முகவர்களுக்கு அவற்றின் தேவைப்பாடு போன்றன தொடர்பில் முறையான கட்டளையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படவில்லை. | 169 மக்கள் அழைப்பு கட்டளைகள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அந்த பெறுமதி விசேட சீட்டிழுப்புக்களில் விற்பனை இலக்குகளை பெற்றுக்கொள்ளல், விற்பனை முகவர்களின் மாநாட்டின் போது செயலாற்றலின் அடிப்படையில் விற்பனை முகவர்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டினை இனங்கண்டு பொருட்களை கொள்வனவு செய்தல் தாமதமின்றிபகிர்ந்தளித்தல். |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) காணியின் உரித்தினை சட்டரீதியாக முழுமையான ஒப்படைக்கப்பட்டிருக்காத போது சபையினால் அதன் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 624,780 ஆன வீடமைப்புக் கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் 2017 யூன் 17 ஆந் திகதி சேவையை கைவிட்டுச் சென்றுள்ளார். எனினும் உரிய ஆதனங்களின் உரித்தினை மீளகோரி அந்த தரப்பினரால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அதன் ஒரு தரப்பாக சபை பெயரிடப்பட்டிருந்தது. சபையில் தொழில்சார் தகைமையுள்ள சட்டத்தரணியொருவர் உள்ளபோது இந்த வழக்கின் 12 வழக்குத் தொடர்களுக்காக சபையினால் ரூபா 263,975 தொகை செலுத்தி வெளி சட்டத்தரணி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | தாய் மற்றும் தமது மகன் (தேசிய லொத்தர் சபையின் ஊழியர்) இடையே காணியின் உரித்து தொடர்பில் இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்து தீர்ப்பு வெளியிட நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் கௌரவ நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பின் பின்னர் மேலதிக தீர்மானம் எடுக்க எதிர்பார்த்துள்ளேன். | ஆதன கடன் தொகை மற்றும் உரிய சட்டத்தரணி கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) 2016 ஆம் ஆண்டின் போது முகவர்களுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு விற்பனை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 4,298,410 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது மீள அனுப்பப்பட்டிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த விற்பனை அடிப்படையில் பதவியணிக்கு மற்றும் முகவர்களுக்கு ரூபா 35,813,250 ஆன ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் போது கடனை அடிப்படையாகக் கொண்டு உடனடி லொத்தர் சீட்டுக்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கின்றமையினால் அந்த டிக்கட்டுக்களின் மீள பெறுவனவுகளாக கணக்கு வைப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. | பிற்போடப்பட்ட லொத்தர்களுக்காக விற்பனை தரகு மற்றும் கொடுப்பனவுகள் மீள சீராக்க நடவடிக்கை எடுத்தல். |
| (இ) 2018 மார்ச் 27 ஆந் திகதி கண்டி மாவட்டத்தில் நிலவிய கலவரத்தின் அடிப்படையில் அந்த மாவட்டத்தின் பிரதிநிதிகளுக்கு 4 சீட்டிழுப்புக்களுக்காக மொத்த லொத்தர் சீட்டுக்கள் 264,000 தொகையும் விற்பனை செய்யாததாக கருதி உரிய சீட்டுழுப்புக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அந்த முகவர்களினால் அதுவரையும் விற்பனை செய்யப்பட்டிருந்த அனைத்து லொத்தர் சீட்டுக்களும் உள்ளடங்கலாக அனைத்து டிக்கட்டுக்களும் இரத்துச் செய்வதற்கு | 2018 மார்ச் 07 ஆந் திகதி கண்டி மாவட்டத்தில் ஏற்பட்டஅவசர நிலைமையினுள் சீட்டிழுப்புக்குரிய லொத்தர் சீட்டுக்கள் சீட்டிழுப்பிற்கு முன்வைக்கப்படாமை மற்றும் அது சபையினால் மீளப்பெற்றுக்கொண்ட லொத்தர் சீட்டுக்களாக கருதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் | விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கையை இனங்கண்டு அதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளானமை தொடர்பில் நிதி அமைச்சின் அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான வியாபார தீர்மானம் தொடர்பில் நிதி அமைச்சின் அங்கீகாரத்தினை பெறுதல் அவசியமற்றது என்பது எமது எண்ணமாகும். | எடுத்தல். |
| (ஈ) | 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெற்ற கொவிசெத 1896 ஆவது சீட்டிப்பின் போது விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்கள் 8,000 எண்ணிக்கையானவை 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி லொத்தர் சபையின் களஞ்சியப் பிரிவிற்கு உரியமாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கையளிக்கப்பட்டுள்ள போதுஅதற்கான பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்காமல் அந்த அளவிலான விற்பனையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக விற்பனை முகவருக்கு மீள செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் மற்றும் உரிய கடமைகளை நிறைவேற்றாமைக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் 2019 யூன் 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த லொத்தர் சீட்டுக்கள் 8,000 இனை மீள கையளிப்பதற்கு உரியதாக லொத்தர் கட்டளை பிரிவிற்கு அல்லது லொத்தர்களை மீளப் பொறுப்பேற்கும் பிரிவிற்கு அல்லது எழுத்துமூல சான்றுப்படுத்தலொன்று அந்த லொத்தர் சீட்டிழுப்பின் போது சீட்டிழுப்பு இடம்பெறும் திகதி அதாவது 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது உரிய பகுதி பொறுப்பான உத்தியோகத்தரின் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் முழுமையாக தேடிப்பார்த்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | லொத்தர் சீட்டுக்களை மீளப் பொறுப்பேற்றுகும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் திருத்தப்படுதல். |
| (உ) | 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெறுவதற்கு நிமித்தமாக இருந்த தனநிதானய இன் 55 ஆவது சீட்டிழுப்பின் 900 லொத்தர் சீட்டுக்கள் மற்றும் மெகா பவர் 285 ஆவது சீட்டிழுப்பின் 500 லொத்தர் சீட்டுக்கள் உரிய மாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கொண்டு செல்லும் போது காணாமல் போனமை காரணத்தினால் அந்த லொத்தர் சீட்டுக்கள் அனைத்தும் உரிய சீட்டிழுப்பின் போது விற்பனை செய்யப்படாதவையாக கருதி அகற்றுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. எனினும் அது தொடர்பில் உரிய பரிசோதனை ஒன்று மேற்கொண்டு உரிய நட்டத்தினை கணிப்பிட்டு கணக்கு வைத்தல் இடம்பெறவில்லை. | முகாமைத்துவத்தினால் பணிப்பாளர் சபையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் இந்த லொத்தர் சீட்டுக்கள் இரண்டின் உரிய பண்டக் குறியீட்டு வீச்சில் உள்ளடங்கிய லொத்தர்களின் எண்ணிக்கையில் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்புக்கு நிமித்தமாக உள்ளவை தொடர்பில் லொத்தர் சீட்டிழுப்பிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | காணாமல் போனவை தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப கட்ட விசாரணையொன்று மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2000 ஆகஸ்ட் 23 ஆந் திகதிமுதல் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள சபை ஆதனக் கடன் பெற்ற உத்தியோகத்தரொருவரின் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 340,275 ஆக இருந்தது. அந்த கடனை அறவிடுவதற்கு 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2000 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சேவையை கைவிட்டுச்சென்ற போதிலும், இந்த உத்தியோகத்தருக்கு உரிய ஆதனக் கடனை தீர்ப்பதற்கு முன்னாள் கட்டுப்பாட்டு முறைமையினை நடைமுறைப்படுத்தி உள்ளமைக்கான காரணம் இந்த ஆதனக் கடன் அவரின் ஊழியர் நலன்புரி நிதியத்திலிருந்து தீர்ப்பனவு செய்ய இயலும் என்பதனால் ஆகும். 2018 நவம்பர் 27 ஆந் திகதிஅவரால் சபைக்கு அறவிடப்படவேண்டிய அனைத்து கடன்களும் அறவிடப்பட்டு எஞ்சிய ஊழிய நலன்புரி நிதியத்திற்கு வழங்குமாறு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆதனக்கடனை அறவிட்டு எஞ்சிய ஊழிய நலன்புரி நிதியத்திற்கு செலுத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான BMW 5860 மோட்டார் வாகனம்விளைவற்றுக் காணப்பட்டது. | தலைவரினால் தமது கடமைகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் இந்த வாகனம் சிக்கனமற்ற விதத்தில் ஈடுபடுத்தப்படுவதுஇல்லை. | பொருத்தமான முறையில் ஓட்டத்தில் ஈடுபடுத்தல். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரத்திற்காக சபையினால் தொடர்ந்தும் ரூபா 329,693 தொகையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அதனை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | இந்த சீட்டிழுப்பு இயந்திரத்தின் ஆங்கில எழுத்துக்கள் வலப்புறம் புலப்படுவதுடன் அதனை மாற்றுவதற்காக பெருந்தொகையான பணம் செலவிட நேர்கின்றமையால் அதனை மாற்றியமைத்திருக்கவில்லை. நிலவும் மகாஜன சம்பத சீட்டிழுப்பு இயந்திரத்தின் மென்பொருள் உள்ளடங்கியுள்ள | சரியான தொழில்நுட்ப அமைப்புக் குறியீடுகளின்பிரகாரம் கொள்வனவு செய்தல். |

கட்டுப்பாடு (Console) செயலற்று உள்ளமையினால் இந்த சீட்டிழுப்பு இயந்திரத்தின் கட்டுப்பாடு (Console) இதற்காக பயன்படுத்தப்படுகின்றது. அதனால் அந்த இயந்திரத்தை விளைவற்று காணப்படுவதாக கூற முடியாது.

### 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையினால் சந்தைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உடனடி லொத்தர் சீட்டுக்களின் இரண்டு வகையின் அச்சிடல் பணிக்காக உடன்படிக்கை காலம் 2015 மே 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் புதிய அச்சீட்டாளர் ஒருவர் தெரிவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்திருக்கவில்லை. | உடனடி லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல் பணிகளுக்காக 2016 மார்ச் 29 ஆந் திகதி அழைக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் முறையீடொன்று காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. புதிய பெறுகைகள் குழுவினால் கூறுவிலைகள் கோரப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு விலைக்கேள்வி கையளித்தல் தொடர்பில் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போது இது பெறுகைக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் விலைக்கேள்வியாளர் ஒருவரினால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அதன் அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அதற்காக எவ்வித பதிலும் கிடைத்திருக்கவில்லை. | பெறுகைகள் உரிய முறையில் திட்டமிடல். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,400,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த சூரிய திரை 500 இல் 2019 யூன் 16 ஆந் திகதி வரையிலும் 474 சூரிய திரைகளின் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்த இருப்புக்களின் தேவைப்பாடு போன்றே நலனாளிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | விற்பனை கூடாரங்களுக்காக மின்சார இணைப்பினை ஓரளவுக்கு குறைக்கும் நோக்கில் விற்பனை கூடாரங்கள் நடாத்தப்படும் விற்பனை முகவர்கள் நலனாளிகளாக நிர்ணயிக்கப்பட்ட சூரிய திரைகள் கொள்வனவு செய்யப்பட்டது. | தேவைப்பாட்டின் அடிப்படையில் பெறுகை மேற்கொள்ளப்பட்டு அவற்றை பகிர்ந்தளித்தல். |
| (இ) 2018 ஆம் ஆண்டின் போது சபையினால் மேம்படுத்தல் உருப்படிகளின் 31 வகைகளுக்காக ரூபா 118,964,725 ஆன | மேம்படுத்தல் உருப்படிகள் 31 கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், | திட்டமிடப்பட்ட தேவைப்பாட்டின் அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருடத்தினுள் பெறுகை நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது 6 உருப்படிகளுக்காக மாத்திரம் இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 21,569,725 ஆகும். | ஆண்டினுள் 11 உருப்படிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், தேவைப்பாட்டின் அடிப்படையில் அதாவது போட்டி நிறுவனத்தின் போட்டி நிகழ்ச்சித்திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு அத்தியவசிய பொருட்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | பொருட்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 13,128,900 பெறுமதியான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை கூடாரங்கள் 300 இனை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு 2019 பெப்ரவரி மாதம் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 10 ஆந் திகதி வரையிலும் 50 விற்பனை கூடாரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. குறித்த வழங்குனருடன் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்காததுடன் தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் 300 விற்பனைக் கூடாரங்களை உற்பத்தி செய்து பகிர்ந்தளிப்பதற்கு வழங்குனருக்கு தவறியமையின் அடிப்படையில் உரிய பிணை முறியின் மூலம் ரூபா 1,509,823.50 தொகையானது அறவிடப்பட்டது. விற்பனைக்கூடாரங்களை விநியோகிப்பதற்கு தாமதமடைந்ததன் காரணத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடாரங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய முறையில் பெறுகைகள் கால அட்டவணையை நடைமுறைப்படுத்துதல். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக சபையினால் அனைத்து பெறுகை நடவடிக்கைகளுக்காகவும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் எதிர்பார்த்த விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளுக்காக மாத்திரம் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளும் உள்ளடங்களாக அனைத்து உத்தேச பெறுகைகளுக்கும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | அனைத்து விடயங்களும் உள்ளடங்களாக பெறுகைகள் திட்டம் தயாரித்தல். |
| (ஊ) | 2016 யூலை மாதத்தின் போது மற்றும் 2018 மே மாதங்களில் ஆரம்பிக்கப்பட்ட செவன மற்றும் தனநிதானய ஆகிய 2 லொத்தர்களின் அச்சிடல் நடவடிக்கைகள் பெறுகையொன்றின் படி அல்லாது அச்சீட்டாளர் இருவருக்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உரிய அச்சிடல் பணிகள் மேற்கொள்ளும் பொது ஏற்பட்ட அச்சிட்ட குறைபாடுகளின் காரணமாக பின்னர் அந்த பணிகள் மீண்டும் இரு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சபையினால் மீளாய்வாண்டின் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 11 | செவன மற்றும் தனநிதானய லொத்தர் சீட்டுக்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தும்போது அவசர தேவைப்பாடு மற்றும் சேவையின் தரம் ஆகியன செயல்திறன் ஆகிய விடயங்கள் கருத்திற் கொண்டு தற்போது உள்ள அச்சீட்டாளர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் விலைக்கேள்வியினை கையளிப்பதற்காக 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த விலைக்கேள்வியை கோரலுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் | பெறுகையின் பிரகாரம் அச்சீட்டாளர்கள் நியமிக்க நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வகையான லொத்தர்களில் 06 சீட்டுகளுக்காக முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது அச்சீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | முறைப்பாடொன்று பரிசீலிக்கப்பட்டமையின் காரணத்தினால் பொருத்தமான அச்சீட்டாளர்களிற்கு ஒப்பந்தம் கையளிக்க முடியாதிருந்தது. தற்போதைய அச்சீட்டாளர்களின் ஒப்பந்த காலம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சின் பெறுகைகள் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (எ) | சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2008 ஆம் ஆண்டு முதலம் நீரோகா லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2015 ஆம் ஆண்டு முதலுலம் மெகா பவர் லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2018 ஆம் ஆண்டு முதலும் அரச அச்சீட்டு கூட்டுத்தாபனத்தினால் இதுவரையிலும் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக எழுத்து மூல உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டினுள் பெறுகை நடைமுறையின் மூலம் ஒரு டிக்கட்டினை அச்சிடுவதற்காக ஆகக்குறைந்த விலை ரூபா 0.3570 ஆன போதிலும், அரச அச்சீட்டு கூட்டுத்தாபனத்திற்கு மகாஜன சம்பத, நீரோகா மற்றும் மெகா பவர் ஆகிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுக் கிரயம் ரூபா 0.50231 செலுத்தப்பட்டவாறு காணப்பட்டது. போட்டி அடிப்படையிலான விலைகளை கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டினுள் மாத்திரம் மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுக்களின் மூலம் மதிப்பிடப்பட்ட நட்டமானது ரூபா 44,804,393 எனுமாறு காணப்பட்ட போதிலும், நீரோகா லொத்தரின் அச்சீட்டு மதிப்பீடு நட்டம் ரூபா 8,474,222 தொகையும் மெகா பவர் லொத்தரின் அச்சீட்டின் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 17,858,050 ஆகவும் காணப்பட்டது. | மகாஜன சம்பத லொத்தர் சீட்டின் அச்சீட்டுப் பணிகளுக்காக ரூபா 5 மில்லியன் வங்கிப் பிணை ஒன்று உள்ளது. அச்சிடல் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு வரைபொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. நீரொகா லொத்தர் சீட்டிற்காக விலைக்கேள்வி கோரல் பணிகள் மேற்கொள்ளப்படாது வெகுசன ஊடக அமைச்சரினால் தேசிய லொத்தர் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு பொருத்தமான அச்சீட்டாளர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு விலைக்கேள்வி கோரல் மேற்கொள்ளப்படவில்லை. 2018 யூன் 26 ஆந் திகதி அமைச்சின் பெறுகைகள் குழுவில் அறிவுரையின் பிரகாரம் நீரோகா மற்றும் மெகா பவர் உள்ளடங்களான சீட்டிழுப்பு இடம்பெறும் 8 வகையான லொத்தர் சீட்டுக்களுக்காக ஒரே முறையில் பெறுகை நடைமுறை ஆரம்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இதுவரையிலும் புதிய பெறுகையின் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | அச்சீட்டாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் உரிய வங்கி பிணை முறியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டில் கணனிமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல் தொடர்பிலான அமைப்புக் குறியீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு முரணாக கிரயம் குறைவான கடதாசிகள் பயன்படுத்தப்பட்டு குறித்த லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் தொடர்பில் அச்சீட்டாளருக்கு தண்டப்பணம் அறவிடப்பட உள்ளவாறு பந்திகளை அச்சிடல் உடன்படிக்கைக்கு உள்ளடக்குவதற்கு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அச்சிடல் எழுத்து முறைமை அனைத்து | அமைப்புக் குறியீடுகளை பாதுகாக்கும் வகையில் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அச்சீட்டாளர்களினால் உரிய நிமயங்களை பாதுகாக்கும் வகையில் உரிய அச்சிடல்கள் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 சனவரி 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட கொவிசெத சீட்டிழுப்பின் போது உரிய அச்சீட்டாளரினால் 30 லொத்தர் சீட்டுக்கள் இரு தடவை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. | லொத்தர் சீட்டு அச்சீட்டாளர்களுக்கும் வழங்குவதற்கும், 4 மாதங்களுக்கு ஒரு தடவை லொத்தர் சீட்டுக்களை அச்சிடல் தொடர்பில் அறிவித்து குழுவொன்றின் மூலம் லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டாளர்களின் கைத்தொழிற்சாலைகளை பரிசோதிப்பதற்கும் அவற்றின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பிலும் அச்சீட்டு கேள்வியினை கையளிக்கும் போது குறித்த அச்சீட்டாளர்களிடம் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசித்துள்ளேன். | பரிசோதித்தல். |
| (ஐ) | சபையினால் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வோரின் பாதுகாப்புக்கு அனைத்து தரவுகளும் QR CODE ஒன்றிற்கு உள்ளடக்கப்பட்டு அச்சிடுமாறு அச்சீட்டாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த அச்சீட்டாளர்களினால் பாதுகாப்பு நடைமுறை பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே வெற்றியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களுக்கும் அந்த பரிசோதனை சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ள முடியாது.<br><br>லொத்தர் அச்சிடலின் போது நுகர்வோரின் பாதுகாப்புக்காக உள்ளபடியான லொத்தர் சீட்டொன்றினை இனங்காண்பதற்கு எளிமைப்படுத்தும் நோக்கில் அதன் மூலம் எதிர்காலத்தில் லொத்தர் சீட்டுக்களின் வெற்றிகள் தொடர்பில் நுகர்வோருக்கு தன்னியக்க முறையில் வலைத்தளத்தினூடாக லொத்தர் சீட்டிழுப்பினை மெய்மையாய்விற்காக QR CODE லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>நீரோகா லொத்தர் சீட்டின் உரிய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு அதன் வெற்றிதன்மை பின்னர் அனைத்து லொத்தர் சீட்டுக்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும். Bar Code இலக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அச்சீட்டு விலகல் தரவுகள் எமது பிரதான தகவல் வலையமைப்பினுள் மற்றும் அரசின் விசாரணை அறிக்கைகள் மூலம் சான்றுப்படுத்தப்படும். அவ்வாறே QR CODE பரிசோதனையை ஸ்மாட் தொலைபேசியின் உதவியுடன் இலவசமான தரவிறக்கம் செய்யக்கூடிய மென்பொருளொன்று பயன்படுத்தப்பட்டு மிகவும் | நுகர்வோருக்கு இலகுவில் இனங்காணக்கூடிய பாதுகாப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ள டிக்கட்டுக்களை அச்சிடல். |

| | | |
|---|---|---|
| | இலகுவில் மேற்கொள்ள முடியும் என்பதுடன் அதற்கான விசேடமான உபகரணமொன்று தேவைப்படாது அதனால் மிகவும் வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இரண்டாவது கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. | |
| (ஒ) சபையினால் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 26,000 கன அடிகள் கொண்ட கட்டிடத்திற்காக மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,750,000 ஆன போதிலும், அதற்காக செலுத்தப்படும் வாடகை பெறுமதி ரூபா 7,677,173 ஆகும். அதனோடு இணைந்ததாக இரும்பு தூண்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 4,885 கன அடிகள் பரப்பான கட்டிடமொன்று ரூபா 1,099,125 தொகையான மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடங்களுக்கான திட்டம் பதிவுக்கு பொருத்தமானது என்பதற்கானசான்றுகள்,நகர சபையின் அங்கீகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி போன்றவை போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பெறுகையின் போது 40,000 கன அடிகளுக்கு குறையாதது என விலைக்கேள்வி கோரப்பட்டமையின் அடிப்படையில் பெரும்பாலான கட்டிடங்களின்உரிமையாளர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் தேவையான மின்சார இயலளவு தேடிப்பார்த்திராமை காரணமாக மாதாந்தம் ரூபா 1,011,840 ஆன மின்சார செலவினம் ஏற்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 26,000 கன அடிகள் பரப்புள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,750,000.00 ஆன போதிலும் அதற்காக ரூபா 7,677,173.00 ஆன தொகையினை செலுத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவை பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>தலைமைக் கட்டிடத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்ட 4885 கன அடிகள் பரப்பளவுள்ள கட்டிடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று பதிவிற்கு பொருத்தமானது என்பதற்கான சான்றிதழ் மற்றும் நகர சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போது உரிய மின்சார இயலளவினை அதிகரித்துள்ளதுடன் மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று பயன்படுத்தப்படவில்லை. | உரிய நிர்மாணம் தொடர்பில் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றினை பெற்றுக்கொள்ளல் மற்றும் கூடியளவு கிரயத்தினை குறைக்கும் நோக்கில் செயற்படல் |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தேசிய லொத்தர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் அங்கீகரிக்கப்படாத ஒப்பந்த | சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர் பதவிகள் நிதி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஓய்வுபெற்று | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பதவியணியை இணைத்துக்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 12 பேர் உள்ளடங்கியிருந்ததுடன் அதனுள் சிரேஷ்ட மட்டத்திலான ஒரு ஊழியர், ஆரம்ப மட்டத்திலான 11 ஊழியர்கள் உள்ளடங்கியிருந்தனர். | சென்றதன் பின்னர் 06 மாத காலத்திற்கு சேவையினை நீடிக்கப்பட்டதன் காரணத்தினால் அந்த உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்தார். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர் விசேட செயற்திட்ட மதியுரையாளர் புதிய 02 பதவிகளுக்காக முறையே மூன்று உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்பட்டு ரூபா 1,200,000 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர் மற்றும் விசேட செயற்திட்ட மதியுரையாளர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளல் நிதி அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருத்தமான தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு இன்றி சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிதி உத்தியோகத்தர் பதவியை கீழிறக்கி விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டவட்டமான தகைமைகள் குறிப்பிடப்பட்டிராது முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றினை வகிக்கும் ஒருவர் அந்த பதவிக்கு 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் சம்பள படி நிலை 3 பிற்போடுமாறு கட்டளையிடப்பட்டுள்ள போது அவ்வாறு செயற்படாது புதிய பதவிக்குரிய சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | பழைய ஊழியர்களை ஊக்குவிக்கும் நோக்கினை முன்கொண்டு மற்றும் நிறுவனத்தின் கடமை தேவைப்பாட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று தற்காலிகமாக பதவிப் பெயர் மாற்றப்பட்டு அந்த பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. | நிர்வாக கட்டளையின் பிரகாரம் செயற்படல். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து அதற்கடுத்த வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூன் 12 ஆந் திகதிகணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவிற்கு உரியதாக வருமான வரி கணிப்பீடு தொடர்பில் பிரச்சினையொன்று எழுந்தமையின் காரணத்தினால் அது தொடர்பில் நிதி அமைச்சரிடம் தீர்வொன்றினை பெற்றுக்கொள்வதற்கு காலங்கடந்தமையினால் நிதிக்கூற்றுக்களை உரிய திகதிகளில் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2018 ஆம் ஆண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் | மீளாய்வாண்டின் கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்கு தெளிவான தரப்பினரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த திட்டம் 2017 நவம்பர் மாதம் 06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது பணிப்பாளர் சபையினால் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு முடிவு காணப்பட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிக்குமாறு முகாமைத்துவ கூட்டத்தின் போது அறிவுரை வழங்கப்பட்டது. பயிற்சி வேலைத்திட்டத்தினை நடாத்துதல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தல். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது 2018 யூன் 03 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் ஆகும். | திட்டத்தினை தயாரித்தல் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கான காலங்கடந்தமையால் உரிய திகதிக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டத்தினை உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது.<br><br>எவ்வாறெனினும் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி சபையின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதன் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கின்றேன். | |

## 4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகரித்த பாதீட்டு அறிக்கையின் பிரதியொன்று வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு வருடம் ஆரம்பிப்பதற்கு 15 வருடங்களுக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டிய போதிலும், அந்த | எதிர்வரும் வருடங்களில் PED/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட்டு தாமதமின்றி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை உரிய தரப்பினருக்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை அறிவித்தல்களின் பிரகாரம் செயற்படல். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 02 ஆந் திகதியே ஆகும். | | |
| (ஆ) | சபையின் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஒன்றுக்கொண்டு இணைந்ததாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிராத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு முடியுமானளவு ஒன்றுக்கொண்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதாக குறித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மகாஜன சம்பத லொத்தரின் சீட்டுழுப்பின் போது புதிய சீட்டிழுப்பு பந்துகள் உருட்டும் இயந்திரமொன்று (Draw balling Machine) மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 87 மில்லியனும் கணனி மென்பொருளினை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 15.5 மில்லியனும் பெறுகை முழுமையாக சேமிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கணனி வன்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களினை கொள்வனவு செய்வதற்கும் அலுவலக உபகரணங்கள் சிறு உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கும் நிதியேற்பாட்டில் 84 சதவீதம் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன்.<br><br>மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் சீட்டிழுப்பிற்காக புதிய சீட்டிழுப்பு இயந்திரமொன்றினை கொள்வனவு செய்வதற்கு உரிய பெறுகை நடைமுறை 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பின்னர் விலைக்கேள்வி கோரல் மற்றும் விலைக்கேள்வி ஆவணங்களை தயாரித்தல் ஆகியவற்றின் கட்டங்கள் முடிவடைந்துள்ளன. | பெறுகை திட்டம் உரிய காலத்தில் நடைமுறைப்படுத்துதல். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் மாவட்ட விற்பனை பிரதிநிதிகளின் ஊக்குவிப்பிற்காக “மகாத்மா ஊக்குவிப்பு விழா” ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் அவ்வாறான ஊக்குவிக்கும் | மகாத்மா ஊக்குவிப்பு விழா 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நாட்டினுள் நிலவிய நிலைமை காரணமாக நிறுவனத்திற்கு ஏற்படும் தாக்கத்தினால் மகாத்மா | குறிப்பாக திட்டமிடப்பட்டு உரிய நிதி ஒதுக்கீடு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | விழாவொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. | விருது வழங்கும் விழா ஒருங்கிணைப்பு பணிகள் மற்றும் மதிப்பீட்டு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. | |
| (இ) | மீளாய்வாண்டில் சந்தைஆய்வு மற்றும் புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட 6,000,000 ஆன நிதியேற்பாடு செலவிடப்படாது எஞ்சியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திட்டவட்டமாக இனங்கண்டு உரிய ஒதுக்கங்களை மேற்கொள்ளல் |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 (நிகழ்ச்சி நிரல்) பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதாக காணப்பட்டது. தேசிய லொத்தர் சபையினால் தமது விடயப் பரப்பின் கீழுள்ள எவ்வாறு செயற்படுதல் என்பது தொடர்பில் மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சபையின் பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளினை அடைந்துகொள்ளல் ஆகியவற்றினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பில் 2030 நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்காக எமது நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எச்சந்தரப்பத்திம் அறிந்திருக்கவில்லை. அது தொடர்பில் உரிய பணிகளை ஒழுங்குபடுத்தி தரப்படுமாயின் உத்தியோகத்தர்களை பங்குகொள்ள செய்ய முடியும் என்பதனை அறிவித்து உரிய தரப்பினருக்கு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வரிசை அமைச்சிடம் கோரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பொருத்தமானது என்பது. |